பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

17 11 2025 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதில், ஊடகங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.
- பிளாஸ்டிக் பொருட்கள் முழுமையாக மறுசுழற்சி செய்யப்பட வேண்டியது அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு.பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.
- வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் ஈடுபடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் வாக்குச்சாவடி முகவர்கள் உறுதிமொழிப் பத்திரம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.
- தமிழகம், புதுச்சேரியின் ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வாஹனிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- உலகக்கோப்பை செஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி இன்று சீனாவின் Wei Yi-ஐ எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக மாற்றுவதில், ஊடக நிறுவனங்கள் முக்கியப் பங்காற்ற வேண்டும் என்று, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஹைதராபாதில், தனியார் ஊடக நிறுவன விருது வழங்கும் நிகழ்ச்சியில் பேசிய அவர், சமூக ஊடகங்களின் ஆதிக்கம் மிகுந்த மற்றும் தவறான தகவல்கள் பரப்பப்படும் காலகட்டத்தில், ஊடக நிறுவனங்கள், தங்களது உண்மையான குறிக்கோளை நிலைநாட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொழில் நிறுவனங்கள், முதலீடுகளின் அடிப்படையில் அல்லாமல், நற்பண்பு, சம்பந்தப்பட்ட துறையில் சிறந்து விளங்குவதாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடன் திகழ்வது அவசியம் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பிளாஸ்டிக் பொருட்களை 100 சதவீதம் மறு பயன்பாடு மற்றும் மறுசுழற்சி செய்ய, பிளாஸ்டிக் தொழில்துறையினர், ஆக்கப்பூர்வ முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று, மத்திய வர்த்தக- தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் வலியுறுத்தியுள்ளார்.

மும்பையில், பிளாஸ்டிக் ஏற்றுமதி அமைப்பின் பவளவிழா மற்றும் சிறந்த ஏற்றுமதியாளர் விருதுகளை வழங்கிப் பேசிய அவர், சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களைத் தயாரிப்பதில், உலகிற்கு முன்னோடியாகத் திகழும் ஆற்றல் இந்தியாவிற்கு உள்ளதாகக் கூறினார்.

பசுமை இலக்குளை அடைய, பிளாஸ்டிக் தொழிற்சாலைகள், நவீன தொழில்நுட்பங்களைப் புகுத்துவதுடன், புதுமையான பொருட்களைத் தயாரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிளாஸ்டிக் பொருட்கள் ஏற்றுமதியை இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு. பியூஷ் கோயல் வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியில் ஈடுபடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் உறுதிமொழிப் பத்திரம் அளிக்க வேண்டும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வாக்குச்சாவடி முகவர்கள், தினந்தோறும் 50 கணக்கீட்டுப் படிவங்களை வாக்காளர்களிடம் இருந்து பெற்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் சமர்ப்பிக்க தேர்தல் ஆணையம் அனுமதி அளித்திருப்பதாக கூறியுள்ளார்.

இதுபோன்று பெறப்படும் படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் சரிபார்த்து அவற்றை டிஜிட்டல் வடிவில் வாக்காளர் பதிவு அலுவலரிடம் சமர்ப்பிப்பார் எனவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தமிழகத்தில் இதுவரை 6 கோடியே 54 ஆயிரத்து 300 படிவங்கள் வாக்காளர்களுக்கு வினியோகிக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது மாநிலத்தின் மொத்த வாக்காளர்களில் 93 புள்ளி ஆறு ஏழு சதவீதம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கூறியுள்ள தேர்தல் ஆணையம், மேலும் அதிக எண்ணிக்கையிலான வாக்குச்சாவடி முகவர்களை நியமிக்குமாறு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான தேமுதிக கூட்டணி குறித்து உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தேனியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வாக்காளர் பட்டியல் திருத்தப் பணியின்போது எந்தவொரு வாக்காளரின் பெயரும் விடுபடாத வகையில் கட்சியினர் பணியாற்றுமாறு கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பைக்காரா நீர்வீழ்ச்சியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக சுற்றுலாப் பயணிகள் அப்பகுதிக்குச் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சிறார்களை இளம் தொழில்முனைவோராக மாற்றிடும் நோக்கில் சேலத்தைச் சேர்ந்த மகளிர் அமைப்பினர் சந்தை ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதன்மூலம் சிறார்களிடையே தொழில்முனைவோராக மாறும் எண்ணமும், பணத்தைக் கையாளும் திறனும் கிடைத்துள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் திருமதி சுவாதிகா சிவா தெரிவித்துள்ளார்.

பெற்றோருடன் செல்லும்போது நினைத்ததை வாங்க தூண்டும் தங்களுக்கு இந்த சந்தை பொருள் ஈட்டும் ஆர்வத்தை ஏற்படுத்தியிருப்பதாக அதில் பங்கேற்ற சிறுவர்கள் கூறுகின்றனர்.

**<<<<>>>>**

தமிழகம், புதுச்சேரியின் ஒருசில இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடலூர், நாகை, மயிலாடுதுறை, திருவாரூர் மாவட்டங்களில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கனமழை எச்சரிக்கை விடப்பட்டிருப்பதால் ஆற்றங்கரை மற்றும் நீர்நிலைகளை ஒட்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<>>>>**

*இருவரிச் செய்திகள்*

இங்கிலாந்தில் தஞ்சமடையும் வெளிநாட்டினர் இரண்டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை அனுமதி பெற வேண்டும் என்று அந்நாட்டு உள்துறை அமைச்சர் திருமதி ஷபானா மெஹ்மூத் தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

சர்ச்சைக்குரிய தெற்கு சீன கடற்பகுதியில் சீன ராணுவம் போர் விமானங்கள் மூலம் ரோந்துப் பணி மேற்கொண்டதற்கு ஃபிலிப்பைன்ஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

ஆயுர்வேத மருத்துவம் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்று வருவதாக மகராஷ்டிர முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் கூறியுள்ளார்.

**<<<<>>>>**

உலக மீனவர் தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி முத்துநகர் கடற்கரையில் நடைபெற்ற படகுப் போட்டியை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தொடங்கி வைத்தார்.

**<<<<>>>>**

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் மற்றும் திருவொற்றியூர் சட்டப்பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை ஆட்சியர் திரு. பிரதாப் ஆய்வு செய்தார்.

**<<<<>>>>**

நாமக்கல்லில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை மேலும் 5 காசுகள் உயர்த்தப்பட்டு 6 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டு அருகே இருசக்கர வாகனம் மீது டிப்பர் லாரி மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந்தனர்.

<<<<>>>>

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆட்சியர் திருமதி சந்திரகலா பார்வையிட்டார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சி சார்பில், மெரினா நீலக்கொடி கடற்கரைப் பகுதியில் நேற்று நடைபெற்ற தமிழக பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளை ஏராளமானோர் பார்வையிட்டனர்.

<<<<>>>>

சென்னை அண்ணா நகரில் நடைபெற்ற நடைப்பயணம் மற்றும் மிதிவண்டி பயணத்தில் பங்கேற்றவர்களுக்கு மாநகராட்சி துணை ஆணையர் திரு. கௌசிக் பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை செஸ் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி இன்று சீனாவின் Wei Yi-ஐ எதிர்கொள்கிறார்.

இந்தப் போட்டி கோவாவின் பனாஜியில் நடைபெற உள்ளது.

<<<<>>>>

GT உலக வில்வித்தைப் போட்டியின் ஆடவர் பிரிவில் இந்தியாவின் குஷால் தலால் தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

லக்ஸம்பர்கில் நடைபெற்ற இப்போட்டியில் அவர் அமெரிக்காவின் Stephen Hansen-ஐ வீழ்த்தி பட்டம் வென்றார்.

இப்போட்டியின் 21 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இந்தியாவின் கணேஷ் மணிரத்னம் வெண்கலப் பதக்கம் வென்றார்.

<<<<>>>>>